### பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியதால்தான் இந்தியாவிலேயே தமிழ்நாடு நம்பர் – ஒன்

# ஏன், மீண்டும் தி.மு.கழகம் ஆட்சி அமைக்க வேண்டும் எனும் பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டுசேர்க்க வேண்டும்!

## காட்பாடியில் – கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களை ஆதரித்து –

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பரப்புரை!




திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 1.4.2026 அன்று வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்ற தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர், கழக பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.

*காட்பாடி,ஏப்.3–*

***காட்பாடியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மூத்த திராவிட இயக்கத் தலைவர், கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களுக்கு, உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்கும்படி பெரும் திரளாகக் கூடியிருந்த மக்கள் மத்தியில், வாக்குகள் சேகரித்தார்.***

***அப்போது அவர், ``ஏன், மீண்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைக்க வேண்டும்? மீண்டும் நம் தலைவர் ஏன் முதலமைச்சராக உட்கார வேண்டும்? மீண்டும் உங்களின் அமைச்சர் ஏன் சட்டமன்ற உறுப்பினராக வேண்டும்? என்கிற பிரச்சாரத்தை மக்களிடம் நீங்கள் கொண்டு சேர்க்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.***

***கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:–***

முதலில் இந்தச் சிறப்பான, அன்பான, எழுச்சியான வரவேற்புக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு உங்களின் காட்பாடி தொகுதிக்கு வருகை தந்து, நம் கழகத்தின் பொதுச் செயலாளர் அண்ணன் துரைமுருகன் அவர்களுக்கு, உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கேட்க நம் கழகத் தலைவர் அவர்கள் என்னை அனுப்பியிருக்கிறார்கள்.

நீங்களெல்லாம் வருகிற 23–ஆம் தேதி வாக்குச்சாவடிக்குச் சென்று உதயசூரியன் சின்னத்தில் நம் கழகப் பொதுச் செயலாளர் அண்ணன் துரைமுருகன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று உங்களிடம் கேட்கலாம் என்று வந்தேன். ஆனால், இங்கே வந்ததற்குப் பிறகுதான் தெரிகிறது, நீங்களெல்லாம் ஏற்கனவே முடிவு செய்து வைத்துவிட்டீர்கள்.

உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மிகப் பெரிய வெற்றியை நீங்கள் தேடித் தர வேண்டும். இப்படித்தான் சென்ற முறை 2021–லேயும் வந்து கேட்டேன். 2021–ல் வெறும் 700 வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்தீர்கள். இந்த முறை குறைந்தது 70,000 வாக்குகள் வித்தியாசத்தில் அண்ணன் துரைமுருகன் அவர்களை நீங்கள் வெற்றி பெற வைக்க வேண்டும்.

**உங்களைப் பார்க்க வந்திருக்கிறேன்**

நானும் ஒரு வேட்பாளர். தலைவர் அவர்களும், பொதுச் செயலாளர் அவர்களும் எனக்கும் ஒரு வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள், இந்த முறை இரண்டாவது வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். மூன்று நாட்களாகப் பிரச்சாரம் செய்துகொண்டு இருக்கிறேன். என் தொகுதிக்கு நான் இன்னும் போகவே இல்லை. என் தொகுதியில் நான் ஓட்டு கேட்கவே இல்லை. என் தொகுதிக்குச் செல்வதற்கு முன்னால் நம் காட்பாடிக்கு வந்து உங்களையெல்லாம் பார்த்துவிட்டுத்தான் என் தொகுதிக்குச் செல்ல வேண்டும் என்று உங்களைப் பார்க்க வந்திருக்கிறேன்.

ஏன் தெரியுமா? எனக்கு சீட்டு கொடுத்ததும், எனக்கு வாய்ப்பு கொடுத்ததும் பொதுச் செயலாளர்தான். கட்சியின் பொதுச் செயலாளருக்கு இளைஞர் அணிச் செயலாளராக நான் வாக்கு கேட்டு வந்திருக்கிறேன். உங்களை நம்பி நான் வாக்கு கொடுத்திருக்கிறேன், செய்துமுடிப்பீர்கள் அல்லவா? குறைந்தது 70,000 வாக்கு வித்தியாசத்தில் நீங்கள் வெற்றி பெற வைக்க வேண்டும்.

நான் மூன்று நாட்களாக, கிட்டத்தட்ட 15 தொகுதிகளுக்குச் சென்று மக்களைச் சந்தித்து உதயசூரியன் சின்னத்துக்கு, நம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியைச் சேர்ந்த அனைத்து வெற்றி வேட்பாளர்களுக்கும் வாக்கு சேகரித்துக்கொண்டு இருக்கிறேன். எங்கு போனாலும் மிகப் பெரிய எழுச்சி. நிச்சயம் இந்த முறை 200 அல்ல, 200–க்கும் அதிகமான தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகம், நம் கூட்டணியின் வெற்றி உறுதி செய்யப்பட்டிருக்கிறது. நம் தலைவர் அவர்களும் கடந்த இரண்டு நாட்களாகத் தமிழ்நாடு முழுக்கப் பிரச்சாரக் கூட்டங்களில் பங்கேற்று மக்களைச் சந்தித்துக்கொண்டு இருக்கிறார்.

**காட்பாடி தொகுதிக்குத் திட்டங்கள்**

இந்தப் பகுதியில் பல்வேறு திட்டங்களை, உங்களின் சட்டமன்ற உறுப்பினர், நம் நீர்வளத் துறை அமைச்சர் கொண்டு வந்துள்ளார்கள்.

சுமார் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேர்க்காடு ஊராட்சியில், அரசு கலைக்கல்லூரி உங்களின் அமைச்சர் கொடுத்தது. 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேர்க்காட்டில் பல்நோக்கு மருத்துவமனை உங்களின் அமைச்சர் கொடுத்தது.

கழிஞ்சூர் மற்றும் தாராபடவேடு ஏரி 28 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டு, சுற்றுலாத்தலமாக மாற்றப்பட்டிருக்கிறது.

13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேனம்பாக்கத்தில் ஒரு தடுப்பணை. அரும்பருதியில் ஒரு தடுப்பணை; குகையநல்லூரில் மீண்டும் ஒரு தடுப்பணை; பொன்னை அணைக்கட்டுப் புனரமைப்பு, மேல்பாடியில் ஒரு தரைப்பாலம், 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பரமசாத்தில் ஒரு தடுப்பணை. 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காட்பாடி பிரம்மபுரத்திலிருந்து ரங்காவரம் வரைக்கும் ஒரு புதிய புறவழிச்சாலை. மகிமண்டலம் ஊராட்சியில் தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இன்றைக்கு அதற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. மீண்டும் நம் ஆட்சி அமைந்த உடனே அந்தப் பணிகளைத் தொடங்குவோம்.

**காலணி உற்பத்தித் தொழிற்சாலை**

மேட்டுக்குளம் ஊராட்சியில் உள்ள சிப்காட்டில் காலணி உற்பத்தித் தொழிற்சாலை அமைக்கப்பட்டு, வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் செய்து கொடுத்திருக்கிறோம்.

இதுபோல பல திட்டங்கள் உங்களின் காட்பாடி தொகுதிக்கு வர வேண்டும் என்றால், நீங்கள் மீண்டும் அண்ணன் துரைமுருகன் அவர்களை உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்.

சில கோரிக்கைகள் வைத்திருக்கிறீர்கள். கழிஞ்சூர் பகுதியில் ஒரு சமூக நலக்கூடம், மேல்பாடி, சீகராஜபுரம், திருவல்லம் உள்ளிட்ட ஊர்களுக்குச் சமூக நலக்கூடம், ஆரிமுத்துமோட்டு ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை, லாலாப்பேட்டையில் மயான வசதி, கர்ணம்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளிக்கு, புதிய கட்டடம், சேவூர், தேன்பள்ளி மற்றும் கீரைசாத்து ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை என்று பல கோரிக்கைகளை வைத்திருக்கிறீர்கள்.

இந்தக் கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்றால் மீண்டும் நம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்தாக வேண்டும். இங்கு வந்திருக்கக்கூடிய நீங்கள் உதயநிதி வந்தார், பேசினார், கூடினோம், கூட்டத்தை முடித்துவிட்டு சென்றுவிட்டோம் என்று இருக்கக்கூடாது.

இங்கே வந்திருக்கக்கூடிய இளைஞர் அணி தம்பிமார்கள், தாய்மார்கள், மாற்றுக்கட்சி, கூட்டணிக்கட்சித் தோழர்களென உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்தப் பிரச்சாரத்தை மக்களிடம் எடுத்துக்கொண்டு சேர்க்கவேண்டும்.

**ஏன், வேண்டும் கழக ஆட்சி?**

ஏன், மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைக்க வேண்டும்? மீண்டும் நம் தலைவர் ஏன் முதலமைச்சராக உட்கார வேண்டும்? மீண்டும் உங்களின் அமைச்சர் ஏன் சட்டமன்ற உறுப்பினராக வேண்டும்? என்கிற பிரச்சாரத்தை மக்களிடம் நீங்கள் கொண்டு சேர்க்க வேண்டும். ஒவ்வொரு தெருவாகச் செல்ல வேண்டும், ஒவ்வொரு வீடாகச் செல்ல வேண்டும், ஒவ்வொரு வாக்காளராக நீங்கள் சந்தித்து இந்தப் பிரச்சாரத்தை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். அப்படிப் பார்க்கும்போது நம் திட்டங்களை எடுத்துச் சொல்லுங்கள்.

2021 சட்டமன்றத் தேர்தலில் என்னென்ன திட்டங்கள் கொடுத்தோம்? எவற்றையெல்லாம் நிறைவேற்றியிருக்கிறோம்? என்னென்ன வாக்குறுதி கொடுத்து நிறைவேற்றியிருக்கிறோம்? நம் தேர்தல் அறிக்கையில் சொன்ன முதல் வாக்குறுதி – மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து திட்டம் செயல்படுத்துவோம் என்று சொன்னோம்.

நம் தலைவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுப் போட்ட முதல் கையெழுத்தே மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து திட்டம். ஒவ்வொரு மகளிரும் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரைக்கும் மாதம் மாதம் சேமித்திருக்கிறார்கள்.

குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வந்து படிக்க வேண்டும் என்பதால் முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அரசுப் பள்ளியில் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய அனைத்துக் குழந்தைகளுக்கும் காலையில் பள்ளிக்கு வந்தார்கள் என்றால் முதலில் தரமான காலை உணவு, அதன் பிறகு தரமான கல்வி கொடுக்கப்பட்டிருக்கிறது.

அரசுப் பள்ளியில் படித்த அனைத்து மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் உயர்கல்வி படிக்கச் சென்றால், அவர்களுக்கு மாதந்தோறும் கல்வி ஊக்கத்தொகை 1,000 ரூபாய் நம் அரசு கொடுத்திருக்கிறது. 13 இலட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்றிருக்கிறார்கள்.

**10 இலட்சம் மடிக்கணினிகள்**

இரண்டு மாதத்துக்கு முன்னால் நம் முதலமைச்சர் அவர்கள் 10 இலட்சம் மாணவ, மாணவிகளுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி, ஒரே மாதத்தில் கொடுத்து முடித்துவிட்டோம். இன்றைக்கு அ.தி.மு.க ஒரு பொய்ப் பிரச்சாரத்தைக் கையில் எடுத்திருக்கிறார்கள், இந்த மடிக்கணினி திட்டம் அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டம், அதை நாம் இன்றைக்குச் செயல்படுத்துகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆமாம், அ.தி.மு.க. ஆட்சியில் பள்ளிக்கூடம் படிக்கிற குழந்தைகளுக்குக் கொடுத்தார்கள். 2019–ஆண்டு, அ.தி.மு.க. ஆட்சியிலேயே அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டார்கள்.

பள்ளிக்கூடம் படிக்கிற குழந்தையைவிடக் கல்லூரி படிக்கிற பிள்ளைகளுக்கு மடிக்கணினி பயனுள்ளதாக இருக்கும் என்று இன்றைக்கு 10 இலட்சம் மடிக்கணினிகளை ஒரே மாதத்தில் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் நம் முதலமைச்சர் கொடுத்திருக்கிறார்கள்.

**கலைஞர் மகளிர் உரிமைத் தொகை**

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். சென்ற சட்டமன்றத் தேர்தலின்போது நாம் சொன்ன வாக்குறுதி. கடும் நிதி நெருக்கடி இருந்தாலும் நம் முதலமைச்சர் அவர்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக ஒரு கோடியே 31 இலட்சம் மகளிருக்கு மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தைச் செயல்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்.

அ.தி.மு.க–வும் பா.ஜ.க–வும் சேர்ந்து தேர்தலைக் காரணங்காட்டி எப்படியாவது மூன்று மாதம் இந்தத் திட்டத்தை நிறுத்த வேண்டும் என்று முயற்சி செய்தார்கள். நம் தலைவர் விடுவாரா? அந்தச் சூழ்ச்சியை முறியடித்து 1,000 ரூபாய் கொடுத்ததை நிறுத்துகிறீர்கள், நான் கொடுக்கிறேன் என்று பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மூன்று மாதத்துக்குச் சேர்த்து 3,000, கோடைக் கால சிறப்பு நிதி 2,000 என்று 5,000 ரூபாய், ஒரு கோடியே 31 இலட்சம் மகளிருக்குக் கொடுத்திருக்கிறோம். ஒரு கோடியே 31 இலட்சம் குடும்பங்களுக்கு ஒரே தவணையில் 5,000 ரூபாய் நம் தலைவர் கொடுத்தார்கள்.

இன்றைக்குத் தலைவர் ஒரு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். மகளிர் உரிமைத் தொகை இப்போது 1,000 ரூபாய் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்த உடனே உரிமைத் தொகை 1,000 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தித் தருவேன் என்று நம் தலைவர் சொல்லியிருக்கிறார்கள்.

பல்வேறு கட்சியினர் தேர்தல் வாக்குறுதி கொடுப்பார்கள், தேர்தல் அறிக்கையில் சொல்வார்கள். தி.மு.க. மட்டும்தான் நம் தலைவர் தான் நிச்சயம் சொன்னதைச் செய்து காட்டக் கூடிய அரசு நம் திராவிட மாடல் அரசு என்று தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியும்.

காலை உணவுத் திட்டம் இப்போது ஐந்தாம் வகுப்பு வரைக்கும் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். மீண்டும் நம் தி.மு.க. ஆட்சி அமைந்தது என்றால், எட்டாம் வகுப்பு வரைக்கும் காலை உணவுத் திட்டம் அமல்படுத்தப்படும். புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் கல்வி ஊக்கத் தொகை இன்றைக்கு 13 இலட்சம் மாணவர்களுக்கு மாதம் 1,000 ரூபாய் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். அது 1,000 ரூபாயிலிருந்து 1,500 ஆக உயர்த்தப்படும்.

முதியோர் உதவித் தொகை 1,200 ரூபாயை உயர்த்தி 2,000 ரூபாய் ஆக்குகிறோம் என்று நம் முதலமைச்சர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். கலைஞர் கனவு இல்லம் அடுத்த ஐந்து வருடத்தில் 10 இலட்சம் கலைஞர் கனவு இல்லம் வீடுகள் கட்டப்பட்டு வீடு இல்லாதவர்களுக்கு வீடு கொடுக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கு எந்தவிதமான பிணையும் இல்லாமல் 5 இலட்சம் வரைக்கும் கடன் கொடுக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

**8,000 ரூபாய் கூப்பன்**

ஆட்சி அமைந்த உடனே ஒவ்வொரு மகளிரின் கைகளிலும் நம் முதலமைச்சர் 8,000 ரூபாய் மதிப்புள்ள ஒரு கூப்பன் கொடுத்துவிடுவார். அந்தக் கூப்பனை வைத்துக்கொண்டு, நீங்கள் வீட்டுக்குத் தேவையான மின்சாதன பொருட்களை வாங்கிக்கொள்ளலாம். டிவி, பிரிட்ஜ், குக்கர், மைக்ரோவேவ் ஓவன், மிக்ஸி, கிரைண்டர் உங்களுக்கு எது வேண்டுமோ அதை நீங்களே வாங்கிக்கொள்ளலாம், உங்களின் இஷ்டம். இதெல்லாம் நடக்க வேண்டும் என்றால் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் நம் திராவிட மாடல் அரசு அமைய வேண்டும். அதற்கு நாம் அடுத்த 22 நாட்கள் இந்தப் பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

ஆட்சி அமைந்தால் என்னென்ன செய்யப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறோம். இந்த ஐந்து வருடத்தில் என்னென்ன செய்திருக்கிறோம் என்பதையும் சொன்னேன். இவ்வளவு திட்டங்களைச் செய்ததால்தான் இன்றைக்கு இந்தியாவிலேயே நம் தமிழ்நாடு, இரட்டை இலக்க வளர்ச்சியில் 11.1% வளர்ச்சியுடன் இன்றைக்கு நம்பர் ஒன் மாநிலமாக நம் தமிழ்நாடு இடம் பிடித்திருக்கிறது.

இவ்வளவு சாதனைகளைச் செய்திருக்கிறோம். இதற்கெல்லாம் ஒன்றிய அரசு நமக்கு ஏதாவது துணையாக நின்றிருக்கிறதா? மோடி தமிழ்நாட்டுக்கு ஏதாவது திட்டம் கொடுத்திருக்கிறாரா? சென்ற பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கு எந்தத் திட்டமும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் தமிழ்நாடு என்கிற பெயரே பட்ஜெட்டில் இல்லை. ஆனால், அவர்களுடன் இன்றைக்கு அடிமை அ.தி.மு.க கூட்டணி வைத்திருக்கிறது.

**பயப்படாத அனுபவம்**

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி நேற்று என்னைப்பற்றி பேசியிருக்கிறார். நான் அவரை ரொம்பத் தகாத வார்த்தையில் பேசிவிட்டேன் என்கிறார். நான் என்ன சொன்னேன்? அப்படி ஒன்றும் தகாத வார்த்தை கிடையாது. உண்மையைத்தான் சொன்னேன். நாமெல்லாம் முரட்டு பக்தர்களைப் பார்த்திருப்போம், முரட்டுத் தொண்டர்களைப் பார்த்திருப்போம். இன்றைக்கு இந்தியாவே ஒரு முரட்டு அடிமையைப் பார்த்துக்கொண்டு இருக்கிறது என்று சொன்னேன். இது தகாத வார்த்தையா அம்மா? முரட்டு அடிமை என்பது கெட்ட வார்த்தையா?

அவர் சொல்கிறார் உதயநிதியின் வயது என் அரசியல் அனுபவம் என்கிறார். ஆமாம், அரசியலில் உங்களைவிட எனக்குக் குறைவான அனுபவம்தான். ஆனால், என்ன அனுபவம் இருக்கிறது? எனக்கு எந்த உருட்டல் மிரட்டலுக்கும் பயப்படாத அனுபவம் இருக்கிறது. யாரிடமும் குறிப்பாக, சங்கிகளிடம் பயப்படாத அனுபவம் இருக்கிறது. என்றைக்குமே சுயமரியாதையோடு இருக்கக்கூடிய அனுபவம் இருக்கிறது. தமிழ்நாட்டின் உரிமைகளைக் காப்பதற்கு என்றைக்குமே மக்களுடன் நின்று போராட்டம் செய்கிற அந்த அனுபவம் இருக்கிறது. எனக்கு இந்த அனுபவம் எல்லாம் இருக்கிறது. நான் இன்றைக்கு எடப்பாடி பழனிசாமி அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். உங்களுக்கு என்னென்ன அனுபவம் இருக்கிறது?

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மா இருக்கிற வரைக்கும் அந்த அம்மாவின் கால். அந்த அம்மா இறந்த பிறகு, சசிகலா அம்மா கால். சசிகலா அம்மா சிறைக்குச் சென்றவுடன் ஓ.பி.எஸ் கால். ஓ.பி.எஸ். அவர்களை அனுப்பி வைத்துவிட்டு பிறகு, டி.டி.வி. கால். இன்றைக்குக் கடைசியாக டெல்லிக்குச் சென்று மோடி மற்றும் அமித்ஷா காலையும் பிடித்துக்கொண்டு இருக்கிற அனுபவம்தான் எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு இருக்கிறது. யார் காலில் எல்லாம் விழுந்தாரோ அவர்கள் அத்தனை பேர் காலையும் வாரி விட்டிருக்கிற அனுபவம் அவருக்கு இருக்கிறது.

டெல்லிக்கு நான்கு கார் மாறி மாறிச் சென்று திருட்டுத்தனமாக அமித்ஷாவைப் பார்த்து விட்டு வந்த அனுபவம் எனக்குக் கிடையாது. அமித்ஷா வீட்டுக்குள் சென்றுவிட்டு வெளியே வந்து முகத்தை மூடிக்கொண்டு திருட்டுத்தனமாக ஓடிப்போன அனுபவம் எனக்குக் கிடையாது. தமிழ்நாட்டின் உரிமைகள் அனைத்தையும் டெல்லிக்கு அடகு வைத்த அனுபவம் எனக்குக் கிடையாது. இந்த அனுபவம் எல்லாம் எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு இருக்கிறது. பல தோல்விகளை அவர் பார்த்துவிட்டார், தமிழ்நாட்டு மக்கள் பல தோல்விகளைக் அவருக்கு கொடுத்துவிட்டீர்கள். இந்த முறை 10 தோல்வி பழனிசாமியை மொத்தத் தோல்வி பழனிசாமியாக்கி, வீட்டுக்கு அனுப்புங்கள்.

நம் தலைவர் திரும்பத் திரும்பச் சொல்கிறார் இந்தச் சட்டமன்றத் தேர்தல் தமிழ்நாடு அணிக்கும் டெல்லி அணிக்குமான தேர்தல். ஏன், டெல்லி அணி என்று சொல்கிறோம்? மோடியும் அமித்ஷாவும் அந்தக் கூட்டணியில் இருக்கிறார்கள். மீண்டும் பி.ஜே.பி–யை தமிழ்நாட்டுக்குள் அனுமதிக்கக் கூடாது. அ.தி.மு.க–வுக்கு விழுகிற ஒவ்வொரு வாக்கும் பி.ஜே.பி–க்கு விழுகிற வாக்கு என்பதை நீங்கள் மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். இன்றைக்கு பி.ஜே.பி ஏ டீம், பி டீம், சி டீம் என்று பல டீம்களை இறக்கியிருக்கிறார்கள். ஆனால், எத்தனை டீம் வந்தாலும் தமிழ்நாட்டில் வெற்றிபெறப்போவது நம் தி.மு.க டீம்தான். நாம்தான் மீண்டும் சாம்பியன் ஆகப்போகிறோம். அதைச் செய்து காட்ட வேண்டிய கடமை இங்கே வந்திருக்கக் கூடிய ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாகப் பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன்.

உதயசூரியன் சின்னத்தில் கழகத்தின் பொதுச் செயலாளருக்கு வாக்களித்து குறைந்தது 70,000 வாக்கு வித்தியாசத்தில் அவரை நீங்கள் வெற்றி பெற வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சிறப்பான வரவேற்பளித்த உங்கள் அனைவருக்கும் மீண்டும் என் நன்றியைச் சொல்லி, ஆதரிப்பீர் உதயசூரியன், உதயசூரியன், உதயசூரியன்!

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

**பங்கேற்றவர்கள்!**

நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நந்தகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன், மாவட்டப் பொருளாளர் நரசிம்மன், மாநகரச் செயலாளர் கார்த்திகேயன், பொதுக்குழு உறுப்பினர்கள் தயாநிதி, லோகநாதன், ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் தணிகாசலம், சரவணன், ரவி, கருணாகரன், ஏ.கே.முருகன், வன்னியராஜா, சுனில்குமார், பரமசிவம், முருகப்பெருமான், நேரு, பரமசிவம், ஒன்றிய குழுத் தலைவர் வேல்முருகன், மண்டல குழுத் தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டிட்டோ சரவணன், மாணவர் அணி அமைப்பாளர் சீனிவாசன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் ரவிகுமார், துணை அமைப்பாளர்கள் சத்தியமூர்த்தி, ராஜ்கமல், பிரபு, எழில்குமார், சரவணன், மருத்துவர் தூயவன், கே.சி.சுரேஷ், பன்னீர், இளைஞரணி உள்ளிட்ட அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியைச் சேர்ந்த திராவிடர் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், தேசிய முற்போக்கு திராவிடர் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, மக்கள் நீதி மய்யம், மனிதநேய ஜனநாயக கட்சி, எஸ்.டி.பி.ஐ, ஆதி தமிழர் பேரவை மற்றும் அனைத்து தோழமை கட்சியைச் சேர்ந்த பெரியோர்கள், தாய்மார்கள், இளைஞர்கள், நெசவாளர்கள், விவசாயப் பெருமக்கள், வர்த்தகப் பெருமக்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.